இந்திய உதவி உயர் ஸ்தானிகராலயம்
கண்டி
***
ஊடக அறிக்கை

9வது சர்வதேச யோகா தினம் (IDY), 2023

கண்டி, இந்திய உதவி உயர் ஸ்தானிகராலயம் உள்ளூர் மக்களின் உற்சாகமான பங்கேற்புடன் 9வது சர்வதேச யோகா தினத்தை (IDY) கொண்டாடியது.

2. சர்வதேச யோகா தினம் 2023 இன் பிரதான நிகழ்வு கண்டி சஹஸ் உயனவில் ஜூன் 21 ஆம் திகதி காலை 08:00 மணியளவில் ஆரம்பமானது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் கௌரவ H.E லலித் யு.கமகே அவர்கள் கலந்து கொண்டார். இதில் உரையாற்றிய ஆளுநர், யோகாவின் வியக்கத்தக்க பலன்களையும், மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும் சக்தியை பற்றியும் எடுத்துரைத்தார். கண்டி பிரம்ம குமாரிஸ் இராஜயோக மையத்தினால் 30 நிமிட யோகாசனமும் தியான அமர்வும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மத்திய மாகாண பிரதம செயலாளர் திரு.அஜித் பிரேமசிங்க, மாவட்ட செயலாளர் திரு.சந்தன தென்னகோன், வடமேல் மாகாண பிரதி பிரதம செயலாளர் திருமதி.எம்.ஏ.பி. சுதர்ஷினி, பதில் அரசாங்க இராணுவ முகாம் பல்லேகல, பிரிகேடியர் வசந்த பண்டார, கண்டி மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. மஹிந்த திஸாநாயக்க, மாநகர ஆணையாளர் திரு. இஷான் விஜேதிலக்க மற்றும் அரசாங்க அதிகாரிகள் உட்பட பல்வேறு துறை சார்ந்த அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

3. இந்நிகழ்வில் IDY-2023 அதிர்ஷ்டக் குலுக்கல் முறையில் உள்ளக யோகா போட்டிகளில் வெற்றி பெற்றவர்களும், யோகா குருக்களும் பாராட்டப்பட்டனர். இதன்போது மத்திய மாகாணம் மற்றும் அருகிலுள்ள பகுதிகளில் இருந்து சுமார் 300 யோகா ஆர்வலர்கள் கலந்துகொண்டனர். உதவி இந்திய உயர் ஸ்தானிகர் Dr. அதிரா.எஸ், உதவி உயர்ஸ்தானிகராலயத்தின் அதிகாரிகள் மற்றும் உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், அரசாங்க அதிகாரிகள், போலீஸ், ராணுவ வீரர்கள், இந்திய சமூகத்தினர், ஊடகவியலாளர்கள் மற்றும் யோகா ஆர்வலர்கள் ஆகியோர் இதில் பங்கேற்றனர்.

4. சர்வதேச யோகா தினமான 2023க்கு முன்னதாக, IDY 2023 இன் கொண்டாட்டங்களைக் குறிக்கும் வகையில், ஜூன் 01 முதல் ஏழு மாவட்டங்களில் பதினொரு முன்னோட்ட நிகழ்வுகளை இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்திருந்தது.

* * *

கண்டி
22.06.2023